Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 27, 2024

புதன்கிழமை மார்ச் 27, 2024 | ஒளி: 09 கதிர் 221 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## 17,500 ரூபாய் குறைந்த சம்பளம்

தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் விதிகளின்படி, தேசிய குறைந்தபட்ச ஊதியம் 12,500 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மதிய உணவை பிரித்து வழங்குவது அரசாங்கத்துக்கு வெட்கமாக இல்லையா?

“மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இந்நாட்டுப் பிள்ளைகள் வேலை பார்க்க வேண்டும் என்பது தமது கனவாகும்

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் பாடசாலை மாணவர்களை பலப்படுத்துவதற்காக சீருடை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்ட போதிலும், தற்போது ஆரம்ப பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவு வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

தொடர்ச்சி P2



## மைத்திரியின் வாக்குமூலம்: AG க்கு அனுப்பிவைப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தமை தொடர்பில், குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு (Attorney General ) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தல்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என நம்பகமான வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து அறிவிக்க தேர்தல் ஆணையத்துக்கு சட்டப்பூர்வ அதிகாரம் உள்ளது.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும் எனவும், புதிய ஜனாதிபதி நவம்பர் 17ஆம் திகதிக்கு முன்னர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் எனவும் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படா விட்டால் நவம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் தற்போதுள்ள அரசாங்கம் சட்டப்பூர்வமானதாக அமையாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி, ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு அரசியலமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கட்டளையிடும் பட்சத்தில், ஜனாதிபதித் தேர்தலை ஒரு மாதத்திற்குக் குறையாத காலப்பகுதிக்குள் மற்றும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும்.

## வடமாகாணத்தில் 52 பேர் படுகொலை: 129 பேர் கைது



### முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 08 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ள

■ எம்.றொசாந்த்

வடமாகாணத்தில் கடந்த ஆண்டு 52 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 129 பேர் இது வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 38 பேர் நீதிமன்றங்கள் ஊடாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ்பி ராந்தியத்திற்கு உட்பட பகுதிகளில் 14 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2



## கோட்டை நீதவானை படுகொலை செய்ய சதி

### விசாரிக்குமாறு அமைச்சர் டிரான் பணிப்பு

கோட்டை நீதவான் திலின கமகேவை கொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தேவாலயங்களில் விசேட பாதுகாப்பு

புனித வெள்ளி, ஈஸ்டர் ஆராதனைகளை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் பொலிஸ் மற்றும் ஆயுதப்படையினரால் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி புனித வெள்ளி மற்றும் 31ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தினங்களை முன்னிட்டு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### உப பிரதேச செயலக விவகாரம்:

## கல்முனை வடக்கு மக்கள் 2ஆவது நாளாகவும் போராட்டம்

■ வி.ரி.சகாதேவராஜா

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிருவாக அடாவடித்தனத்துக்கு எதிராக நீதி கோரி நடாத்தும் மக்கள் போராட்டம் செவ்வாய்க்கிழமை(26) இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விவகாரத்துக்கு, அரசியல்வாதிகளே, அரச அதிகாரிகளே அமைச்சின் செயலாளரே, உங்களின் பதில் என்னவென்று அங்கு குழுமியிருந்த மக்கள் கேள்வி எழுப்பினர்.

தொடர்ச்சி P2




## கீரிமலை காணி அளவீடு எதிர்ப்பால் கைவிடப்பட்டது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிக்கும் அடிப்படையில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை (26) காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர்.

இதன்போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன், நில அளவைத்திணைக்களத்தின் வாகனத்தையும் இடைமறித்தனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# அரசாங்கத்துக்கு வெட்கமாக இல்லையா?



இது வெட்கக்கேடான கொள்கையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒரே பாடசாலையில் பயிலும் மாணவர்களைப் பிரித்து வகைப்படுத்தக் கூடாது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவ்வாறான வகைப்படுத்தலை மேற்கொள்ளாமல் சகல மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும் என்றார்.

ஹம்பந்தோட்டை, தங்கல்ல கொடவாய மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (25) நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இந்நாட்டுப் பிள்ளைகள் வேலை பார்க்க வேண்டும் என்பது தமது கனவாகும். சாப்ட்வேயர் இன்ஜினியர்களின் சொர்க்க பூமியாக எமது தேசத்தை மாற்ற வேண்டும் என்ற கனவு நமக்கும் இருக்கிறது. இதற்கு ஆங்கில அறிவும் தகவல் தொழில்நுட்ப கணினி அறிவும் தேவை. சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என்ற எல்லைகளுக்குள் சுருங்கிக் கொள்வதால் இந்த கனவை அடைய முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் காலத்திற்கு ஏற்ற சரியான கல்வி முறையை வழங்காமை சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# மைத்திரியின் வாக்குமூலம்: AG க்கு அனுப்பிவைப்பு



குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் 6 மணித்தியாலங்களுக்கு மேலாக மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குமூலம் திங்கட்கிழமை (25) பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கண்டியில், மார்ச் 22ஆம் திகதியன்று தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்ததை அடுத்து மைத்திரிபால சிறிசேன சிஐடியில், திங்கட்கிழமை (25) ஆஜரானார் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலம் சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



# 17,500 ரூபாய் குறைந்த சம்பளம்

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையின் பரிந்துரையின் பேரில், நியமிக்கப்பட்ட குழு சம்பளத்தை 17,500 ரூபாவாக அதிகரிக்க பரிந்துரை செய்துள்ளது.

அதன்படி, தேசிய குறைந்தபட்ச தினக்கூலியும் 500 ரூபாயில் இருந்து 700 ரூபாயாக அதிகரிக்கப்படும்.

# கீரிமலை காணி அளவீடு எதிர்ப்பால் கைவிடப்பட்டது

காணி உரிமையாளர்களின் நீண்ட நேர எதிர்ப்பினை தொடர்ந்து, காணியினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதிக் கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

குறித்த பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவின்கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளில் 12.0399 கெக்டேயர் (29 ஏக்கர் 3 றூட் 0.20 பேர்ச் ) நிலம் அளவீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 52 பேர் படுகொலை: 129 பேர் கைது

அவை தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 44 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 11 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 05 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 09 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 05 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 04 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 11 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 06 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட திகளில் 08 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 17 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 04 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ்



**“ கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 13 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 37 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 05 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்**

பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 08 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில், 11 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 07 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 13 கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் 37 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட நிலையில், 05 சந்தேகநபர்கள் நீதிமன்றம் மூலம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# தேவாலயங்களில் விசேட பாதுகாப்பு

சமூக பொலிஸ் குழுக்கள் மற்றும் அந்தந்த தேவாலயங்களின் பாதிரியார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து இந்த விசேட பாதுகாப்புப் பணியை அமுல்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர், சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தமது மாவட்டத்தின் ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளிலும் அதிகமாக மக்கள் கூடும் தேவாலயங்களைத் தெரிவு செய்து அது தொடர்பான பாதுகாப்பு விடயங்களைத் தனிப்பட்ட முறையில் ஆராயுமாறு பணித்துள்ளார்.

தேவாலய வளாகத்தின் பாதுகாப்பு, மத வழிபாடுகளை ஆரம்பிக்கும் முன், வழிபாட்டாளர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு வளாகத்தைச்



சரிபார்த்தல், சமய வழிபாடுகளுக்கு வரும் மக்களைச் சோதனை செய்தல் மற்றும் பயணப்பொதிகளை சோதனை செய்தல், இந்த பாதுகாப்புப் பணி வரிசையில் உள்ளடங்குவதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கோட்டை நீதவானை படுகொலை செய்ய சதி

கோட்டை நீதவான் திலின கமகேவை T81 கிரனேட் லோஞ்சர் மூலம் தாக்குதல். நடத்தி கொலை செய்ய முயல்வதாகத் தகவல் வழங்கிய கடிதம் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் பணிப்புரை பெற்றுள்ளதாகக் குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. நீதவானைக் கொல்வதற்காக ஒருவர் தொலைபேசி மூலம் இந்தத் துப்பாக்கியைக் கோரியதாகத் தகவல் கொடுத்தவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த உளவு கடிதத்தில் துப்பாக்கியைப் பெற்றுக்கொள்ள அழைப்பு விடுத்த நபரின் தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கல்முனை வடக்கு மக்கள் 2ஆவது நாளாகவும் போராட்டம்

பிரதேச செயலகத்தின் முன்பாக வீதியருகே அமர்ந்து அமைதியான முறையில் போராட்டத்தை ஆண்களும், பெண்களும் முன்னெடுத்து வருகிறனர்.

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளைப் பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாகத் திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்.

“கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாகத் தடுக்கப்பட்டு வருவதுடன் இருக்கும் அதிகாரங்களும் அண்மைக்காலமாகப் பறிக்கப்பட்டும் வருகின்றன” என்றனர்.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களைப் பெற்று மக்களுக்கான அரச சேவையைப் பெறுவதற்கு முடியாமல்



கடந்த 30 வருடங்களாகத் தவித்துக் கொண்டிருக்கும் இப் பிரதேச மக்கள் அமைதிப் போராட்டத்தை, திங்கட்கிழமை (25) ஆரம்பித்திருந்தனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வருட நிதியிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துமீறிய நிருவாக அடக்குமுறைகள் இடம்பெறுவதாகவும் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டனர்.

# “சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது மனித உரிமை மீறல் அல்ல”

போராட்டம் என்ற போர்வையில் வன்முறையை விதைத்தவர்களிடம் இருந்து பாராளுமன்றம், பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி அலுவலகம் உள்ளிட்ட அரச சொத்துக்களைக் காப்பாற்றி நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை மனித உரிமை மீறல் என சிலர் சுட்டிக்காட்ட முயன்றனர். இருந்தபோதும், அந்த நடவடிக்கையை அன்று எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்பியிருக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடினமான மற்றும் விரும்பத்தகாத யுகத்தின் பின்னர் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, ஒவ்வொரு துறையிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் திங்கட்கிழமை (25) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடும் நோக்குடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டுக்கு புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அதற்காக பிரதமரின்



செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரீட்சை சுமையை குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பல்கலைக்கழக கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் கீழ் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலம், இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, 2035ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர் தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்பில் நல்லதொரு சூழல் இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல்கலைக்கழக நிர்வாகத்தை வெளித் தரப்பினருக்கு வழங்குவதா அல்லது மாற்றங்களை மேற்கொண்டு பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிய சூழலை உருவாக்க வேண்டுமா என்பதை பல்கலைக்கழகங்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் களனி பல்கலைக்கழக திறப்பு விழாவில் கலந்து கொண்ட போது சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற தான் தவறவில்லை என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்துரைத்ததோடு, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய புத்திஜீவிகளால் அறிவை உருவாக்குதல், அந்த அறிவைப் பகிர்ந்தளித்தல், நாட்டின் தேசிய தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுவதாக இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பல்கலைக்கழக கட்டமைப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து பிரித்து சுயாதீன கல்வி நிறுவனங்களாக மாற்றுதல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மாணவர்களுக்கு இன்றைய மாணவர்களின் தேவைக்கேற்ப தனித்துவமான தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கற்கைநெறிகளை கற்க வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் தேவையான சூழலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிக்கும் நிறுவனங்களாக மாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# “மைத்திரி சொன்னதை மக்களுக்கு சொல்லுங்கள்”

கே.எல்.ரி.யுதாஜித், வ.சக்தி

ஈஸ்டர் குண்டுவெடிப்ப தொடர்பில் மைத்திரிபால சிறிசேன கூறியவை அனைத்தும் மக்களுக்கு வெளிப்படையாகக் கூறப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரம் (ஜனா),

தேர்தல் திருத்தச் சட்டம் வரவிருக்கின்ற தேர்தலை ஒத்திப் போடுவதற்கானதாக இருக்கக்கூடாது என தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.



மேலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியிலேயே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், அந்தக் குண்டுவெடிப்பு கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சி பீடத்துக்குக் கொண்டு வருவதற்காக, அவரின் கீழ் இயங்கிய புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக இலங்கை அரசியல் கட்சிகளால் பேசப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாகத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரான சிவனேசத்துறை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றார். அதில் அவர் பல விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். ஈஸ்டர் படுகொலை யாருக்காக நடத்தப்பட்டது. எதற்காக நடத்தப்பட்டது உள்ளிட்ட உண்மைகள் வெளிவரவேண்டும். மைத்திரிபால சிறிசேன, எதைக் கூறியிருக்கின்றார் என்பது இன்னமும் வெளிவரவில்லை. ஆனால், அவருடைய கூற்றுக்கள் அனைத்தும் மக்களுக்கு வெளிப்படையாகக் கூறப்பட வேண்டும்.


தேர்தல் ஆண்டாக இந்த வருடம் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலா?, பாராளுமன்றத் தேர்தலா? முதலில் நடைபெறும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

ஆனால், இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் முறையினை மாற்றியமைக்க அமைச்சரவை அங்கிகாரம் கொடுத்திருக்கின்றது.

அது, நடைபெறவிருக்கும் தேர்தல்களை பிற்போடுவதற்கான ஆயத்தமாகக் கூட இருக்கலாம்

ஏனென்றால், மாகாண சபைத் தேர்தல்கள் 7 வருடங்களாக இந்த நாட்டில் நடைபெறாமல் இருக்கிறது. மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகப் பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து இன்று வரை அத்தேர்தல் நடைபெறாமலிருக்கின்றது.

அதேபோன்று கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல்களை ஒத்திப்போடுவதில் வல்லமையுள்ள எங்களுடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்வரும் தேர்தல்களையும் தள்ளிப் போடுவதற்கான ஆயத்தமாக இந்தத் தேர்தல் முறை மாற்றம் சம்பந்தமான சட்டமூலத்தைக் கொண்டுவருகின்றாரோ என்ற சந்தேகம் இருக்கின்றது என தெரிவித்துள்ளார்.



## ‘அக்குபஞ்சர்’ சிகிச்சையால் ஒருவர் மரணம்

எம்.றொசாந்த்

யாழ். அச்சுவேலி கிழக்கு பகுதியில் அக்குபஞ்சர் சிகிச்சை பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முழங்கால் வலியினால் அவதிப்பட்டு வந்த 64 வயதான மாணிக்கம் சற்குணராஜா என்பவர், சமூக வலைத்தளங்களில் வந்த விளம்பரங்களை நம்பி, யாழ். நகர்ப் பகுதியை அண்மித்த பிறவுண் வீதியில் அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வரும் சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

அங்கு முழங்கால் வலிகளை போக்குவதாக முழங்கால்களில் ஊசிகளைக் குத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சையின் பின்னர் கடுமையான வலிகள் ஏற்பட்டமையால், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் போது, அக்குபஞ்சர் சிகிச்சை என தவறான முறைகளில் செலுத்தப்பட்ட ஊசிகள் மூலம் கிருமித் தொற்றுக்கள் ஏற்பட்டு, அவை உடல் முழுவதும் பரவியதால் மரணம் சம்பவித்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.

## ஆவணத்தை மென்று துப்பிய பெண் சட்டத்தரணிக்கு சிக்கல்



வழக்கு ஆவணத்தில் உள்ள ஆவணத்தை மென்று அழித்து, சட்டத்தரணி தொழிலுக்கு ஒவ்வாத வகையில் நடந்து கொண்ட பெண் சட்டத்தரணியை, வழக்கு முடியும் வரை சட்டத்தரணி பணியில் இருந்து இடைநீக்கம் செய்ய உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை (25) தீர்மானித்துள்ளது.

12 வருடங்களாக சட்டத்தரணியாகக் கடமையாற்றிய பிரதிவாதி சட்டத்தரணியின் செயற்பாடு பாரதூரமான நடவடிக்கையாகக் கருதப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிக்கு எதிராகத் தொழில் நெறிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர் நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரசேகர மற்றும் ஏ.எச்.எம்.டி.நவாஸ் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

கெக்கிராவ நீதவான் நீதிமன்ற பதிவாளர் காரியாலயத்தில் உள்ள வழக்கு ஆவணமொன்றை வலுக்கட்டாயமாக எடுத்து வாயில் போட்டு அழித்ததன் மூலம் சட்டத்தரணிக்குத் தகாத வகையில் நடந்து கொண்ட குற்றச்சாட்டில், பிரதிவாதி சட்டத்தரணிக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை முன்வைத்துள்ளார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, முன்வைக்கப்பட்ட வாதங்களைப் பரிசீலித்த நீதியரசர்கள் குழு, தொழில் நெறிமுறைகளை மீறியதாக சட்டத்தரணிக்கு எதிரான வழக்கை ஏப்ரல் 2ஆம் திகதி விசாரிப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்.



## பல உயிரினங்களுடன் சிக்கிய உள்ளூர் ஜோடி

தாய்லாந்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பல உயிரினங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன்,சம்பவம் தொடர்பில் இளம் வர்த்தக தம்பதியினரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான 88 உயிருள்ள விலங்குகளுடன் இந்த ஜோடி கொழும்பு-கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இருவரும் தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திங்கட்கிழமை (25) பிற்பகல் 04.35 மணியளவில் வந்தடைந்தனர்.

இந்த நிலையில், சுங்கத்துறையின் பல்லுயிர் பிரிவு மற்றும் வேளாண்மைத்துறையின் கால்நடை தனிமைப்படுத்தல் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகளின் சோதனையிட்டதையடுத்து, குறித்த ஜோடி கைது செய்யப்பட்டுள்ளது.

கைதானவர்கள் அவிசாவளை, புவக்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் கொண்டு வந்த பொதிகளில் தட்டான்கள், தவளைகள், மீன்கள், அணில்கள், ஆமைகள், பல்லிகள், வெள்ளை எலிகள், பச்சோந்தி மற்றொரு வகை புழுக்கள் மற்றும் எலிகள் நாட்டிற்கு எடுத்து வந்துள்ளனர். குறித்த ஜோடி சுங்க அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் நிறைவடையும் வரை எடுத்துவரப்பட்ட விலங்குகள் கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தலில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## 304 விளையாடிய 30 பேரும் விடுவிப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

சட்டவிரோதமாக ஒன்று கூடினார்கள் என்று கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த 30 பேரின் வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (26) தள்ளுபடி செய்துள்ளதுடன், 30 பேரும் வழக்கில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர்

பாலமுனையில் வளகு ஒன்றில், மார்ச் முதலாம் திகதி ஒன்று கூடி பொழுதுபோக்குக்காக 304 விளையாடிக் கொண்டிருந்தபோது, சட்டவிரோதமாக ஒன்று கூடினார்கள் எனும் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்


விசாரணைகளை மேற்கொண்ட காத்தான்குடி பொலிஸார், இவர்களை இம்மாதம் முதலாம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்படுத்தினர். அப்போது ஒரு இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதவா நீதிமன்றத்தில். மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஹம்சா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(26) எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே நீதவான் இந்த வழக்கை தள்ளுபடி செய்ததுடன் வழக்கில் இருந்தும் 30 பேரையும் விடுவித்து, வழக்கை முடிவுக்கு கொண்டுவந்துள்ளார்.

இந்த வழக்கில் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.ஆர்.எம். நிப்றாஸ் ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் பலி



யாழ்.தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பகுதியில் அதி சொகுசு பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதியில் மீசாலை வீரசிங்கம் கல்லூரிக்கு முன்பாக திங்கட்கிழமை (25) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், விவேகாணந்த நகர் கிழக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த 41 வயதுடைய சின்ராசா சுதன்ராஜா என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழுப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதி சொகுசு பஸ், பாதசாரிக் கடவையில் பிறிதொரு வாகனத்தை வேகமாக முந்திச் செல்ல முற்பட்ட வேளை, கிளிநொச்சியிலிருந்து கைதடி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி மற்றும் நடத்துனர் பேருந்தில் இருந்து தப்பித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

இருவரையும் கைது செய்த பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில் இருவர் பலி; ஒருவர் காயம்




பாணந்துறை பின்வத்த பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை(26) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் பாணந்துறை மற்றும் பின்வத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிள் வாத்துவாவில் இருந்து வந்து பின்வத்த பிரிவென வீதியில் திரும்ப முற்பட்ட போது மற்றைய மோட்டார் சைக்கிள் பாணந்துறையில் இருந்து வந்து நேருக்கு நேர் மோதியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## அரவம் தீண்டி தச்சர் மரணம்

மொனராகலையில் அரவம் தீண்டி சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர், கடந்த 25ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை-தொம்பகஹவெல பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய தச்சர், பாம்பு தீண்டி, மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த தச்சர், கடந்த திங்கட்கிழமை (18) இரவு பணி முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது, இடது காலில் பாம்பு தீண்டியமை குறிப்பிடத்தக்கது.



## அம்பாறையில் பணிபகிஷ்கரிப்பு

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவாக அம்பாறை மாவட்டத்தின் சில வைத்தியசாலைகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.


செவ்வாய்க்கிழமை (26) சாய்ந்தமருது காரைதீவு ஒலுவில் அட்டப்பளம் நிந்தவூர் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களே இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை திருக்கோவில் வைத்தியசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வைத்தியசாலைக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தது.

இதனால் அங்கு பணியாற்றிய வைத்தியர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் கடமையை உரிய முறையில் மேற்கொள்ளப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும் இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை (11) திருக்கோவில் மெதடிஸ்த மாகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய துரையப்பா வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவன் மயங்கி வீழ்ந்த திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாணவன் உயிரிழப்புக்கு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கவலையீனமாக காரணம் என குற்றம்சாட்டி வைத்தியசாலைக்கு முன்னால் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




ஆர்ப்பாட்டத்தில் வைத்தியசாலை மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தியதில் கட்டிடத்தின் பல யன்னல் கண்ணாடிகள் உடைந்து தேசமடைந்ததுடன், வைத்தியசாலை பெயர்ப் பலகையை உடைத்து சேதப்படுத்தியதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெட்டி நிரம்பும் வரையிலும் வயிற்றை நிரப்பக்கூடாது

முன்னொரு காலத்தில் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைத்த சலுகைகள், தற்போது கல்விப்பயிலும் மாணவர்களுக்குக் கிடைப்பது குறைவு. சாப்பாடு கூப்பன்கள், இலவச சீருடைகள், ஏன்? பாதணிகள் கூட வழங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தன. ஒரு கிளாஸ் பசும் பால் வழங்கப்பட்டது. இவற்றில், இலவச சீருடையைத் தவிர, ஏனையவற்றிற்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. இதற்கிடையே, "2024 பாடசாலை உணவுத் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பலரும் பாடசாலைகளுக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர். இன்னும் சிலர், இடை விலகி, சின்னசின்ன வேலைகளுக்குச் சென்றுவிட்டார். குடும்ப சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாத பலரும், தங்களுடைய பிள்ளைகளை வீடுகளிலேயே வைத்துக்கொண்டுள்ளனர். ஒரு நேரத்துக்கான உணவைக்கூட வழங்கமுடியாத குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் விட்டுவிடுகின்றனர்.

இந்நிலையில்தான், நாட்டிலுள்ள தரம் 1-5 வரை உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையில் போசாக்கு உணவு வழங்குவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், திங்கட்கிழமை (25) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தக் காலை உணவை வழங்கப்படவுள்ளது.

"ஆரோக்கியமான சுறுசுறுப்பான தலைமுறை" என்ற கருப்பொருளின் கீழ், 2024இற்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போசாக்குப் பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவையெல்லாம் நல்ல எதிர்பார்ப்பாகும். எனினும், பாடசாலை மாணவர்களுக்காகக் கடந்தகாலங்களில் வழங்கப்பட்ட ஒருகிளாஸ் பசும்பாலுக்கு நடந்தது என்ன? அதேபோன்று, தற்போதைய உணவுத் திட்டமும் இடையிலேயே கைவிடப்பட்டுவிடுமா? இன்றேல், அடுத்தடுத்து நடத்தப்படவிருக்கும் தேர்தல்களை இலக்கு வைத்து, இவ்வாறான திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா? என்ற பெரும் சந்தேகம் மக்களிடத்தில் எழாமல் இல்லை.

எந்த நிறங்களில் கட்சிகளை வைத்திருந்தாலும் பரவாயில்லை. பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகம் செய்யும் திட்டங்கள் தேசிய திட்டங்களாகவே இருக்கவேண்டும். ஆட்சி மாறினாலும் திட்டங்கள் மாறக்கூடாது. நடைமுறையில் இருக்கும் திட்டங்களுடன் ஒரிருபடி மேல் சென்று புதிய திட்டங்களை உள் சேர்க்க வேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகும் என்பதுடன், இந்த திட்டங்கள் எல்லாம் வாக்குப் பெட்டிகளை நிரப்பிக்கொண்டதன் பின்னர் நிறுதப்பட்டுவிடக்கூடாது என்பதே தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டிருக்கும் பெற்றோர்களின் எதிர்பார்ப்பாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## கோப் குழுவின் தலைவர்:

# முன்னைய தலைவர்களை விட மோசமானவரா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ராஜபக்ஷக்களும் அவர்களது கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் கடந்த கால சம்பவங்களிலிருந்து, குறிப்பாக 2022 கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கியெறிந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து எந்தவொரு பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையும் கோப் என்று அழைக்கப்படும் பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவில் தற்போது ஏற்பட்டு இருக்கும் நிலைமை எடுத்துக் காட்டுகிறது.

31 உறுப்பினர்களைக் கொண்ட அக்குழுவிலிருந்து கடந்த ஒரு வாரத்தில் 11 உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர். அக்குழுவின் தவிசாளராக பொது ஜன முன்னணியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் இவ்வாறு இராஜினாமா செய்துள்ளனர்.

இவ்வாறு கோப் குழுவிலிருந்து விலகியவர்களில் முதன்முதலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விகரமரத்னவே கடந்த வாரம் தமது இராஜினாமாக் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தார். ஆனால், அவர் மற்றொரு விடயத்தையே தமது கடிதத்தில் இராஜினாமாவுக்கான பிரதான காரணமாகக் குறிப்பிட்டு இருந்தார். கோப் குழுவில் எவ்வளவு தான் ஊழல்கள் மோசடிகளை அம்பலப்படுத்தினால் அவை தொடர்பாக எவ்வித மேல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதே அவ்விடயமாகும். அடுத்ததாக அவர் கோப் குழுவின் தலைவர் பதவிக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிப்பதே மரபு என்றும், எனவே, ஆளும் கட்சியைச் சேர்ந்த அபேகுணவர்தனவை நியமித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டு இறுதியாகப் பெயர் குறிப்பிடாது ஊழல்களில் ஈடுபட்டோர்களை ஊழல்களை ஆராயும் இக்குழுவுக்கு நியமிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தமிழ் உறுப்பினர் (இலங்கை தமிழரசுக் கட்சியின் சாணக்கியன் இராசமாணிக்கம்) ஒரு முஸ்லிம் உறுப்பினர் (ஐக்கிய மக்கள் சக்தியின் எஸ்.எம். மரிக்கார்) உள்ளிட்ட இராஜினாமா செய்த 11 பேரும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பொதுஜன முன்னணியின் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவாகி பின்னர் அக்கட்சியிலிருந்து விலகியிருப்பவர்களுமாவர்.

சபாநாயகரால் கோப் குழுவுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தமது பெரும்பான்மை வாக்குகளாலேயே அதன் தலைவரைத் தெரிவு செய்கின்றனர். ஆனால், குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அடிப்படையைப் பார்க்கும்போது, ஆளும் கட்சியின் விருப்பத்துக்கு மாறாக குளித்தலைவரை தெரிவு செய்ய முடியாது. ஏனெனில், ஒவ்வொரு கட்சிக்கும் பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரப்படியே குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். எனவே, குழுவில் பெரும்பான்மை பலம் ஆளும் கட்சியிடமே எப்போதும் செல்கிறது. எனவே, பொதுஜன முன்னணியின் தலைவர்களின் ஆலோசனையின் படியே அபேகுணவர்தன தவிசாளராக நியமிக்கப்பட்டார் என்று முடிவு செய்வதில் எவ்வித தவறுமில்லை.

ரோஹித்த அபேகுணவர்தனவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் அவை எதுவும் எந்தவொரு நீதிமன்றத்திலும் நிரூபிக்கப்படாததால் அவர் நிரபராதி என்றும் எனவே அவரை கோப் குழுவின் தலைவராக நியமித்ததில் எவ்வித் தவறும் இல்லை என்றும் பொதுஜன முன்னணியினர் வாதிடலாம். ஏனெனில், அவர்கள் இதற்கு முன்னர் நீதிமன்றங்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் தொடர்பாகவும் அவ்வாறு மென்மையாகத் தான் நடந்து கொண்டுள்ளனர்.

அக்கட்சியின் இரத்னபுரி மாவட்ட எம்.பி. பிரேமலால் ஜயசேகர் 2015இல் அரசியல் எதிரி ஒருவரைக் கொலை செய்ததற்கு இரத்னபுரி மேல் நீதிமன்றத்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதேபோல், கம்பஹ மாவட்ட எம்.பியான பிரசன்ன ரணதுங்க ஆறு கோடி ரூபாய் கப்பம் பெற்றார் என்று மேல் நீதிமன்றமொன்றால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவராவார். ஆனால், அவர்கள் அத்தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர் என்ற அடிப்படையில் பொதுஜன முன்னணி அவர்களுக்குப் பாராளுமன்றத்துக்கு வர வாய்ப்பு அளித்தது. சட்டப்படி அதுசரி தான். ஆனால், மேன்முறையீடு விசாரணை செய்யப்பட்டு முடியும் வரையாவது அக்கட்சி மேல் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மதித்திருக்க வேண்டும்.

11 உறுப்பினர்கள் இராஜினாமா செய்திருந்தும் கோப் குழு முதன்முறையாகக் கடந்த புதன்கிழமை அபேகுணவர்தனவின் தலைமையில் கூடியது. அதுவும் சட்டப்படி சரி தான். ஏனெனில், சட்டப்படி அக்குழு கூடிச் செயற்படுவதற்கான கோரம் இந்த இராஜினாமாக்களால் பாதிக்கப்படவில்லை. எனினும் குழுவின் தலைவரை ஊழல் பேர்வழி என்று கூறி குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இராஜினாமாச செய்யும்போது அக்குழுவின் நம்பகத்தன்மை எவ்வகையானது என்ற கேள்வி எழுகிறது.

குழுவின் நம்பகத்தன்மை ஏதுவாக இருப்பினும் எதிர்க்கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு வித சவாலாகவே பொதுஜன முன்னணி அபேகுணவர்தனவை கோப் குழுவின் தலைவராக நியமித்துள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறியிருந்தார். பொதுஜன முன்னணியின் உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார கோப் குழுவின் தலைவராக இருந்தபோது கடந்த நவம்பர் மாதம் கிரிக்கெட் சபையில் ஊழல்களைப் பற்றித் தோண்டித் தோண்டி கேள்விகளை எழுப்பிய குழு உறுப்பினர் ஒருவரை அவர் சைகை மூலமாகத் தடுத்ததாகவும் எனவே, அவர் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினர்.

உங்களுக்கு ரஞ்சித் பண்டார வேண்டாம் என்றால் நாங்கள் ரோஹித்த போன்ற ஒருவரையே நியமிப்போம் என்ற சவாலையே பொதுஜன முன்னணி விடுத்துள்ளது என்று அனுர குமார கூறியிருந்தார்.

பொதுஜன முன்னணியின் தலைவர்கள் இவ்வாறு செய்பவர்கள் தான். உதாரணமாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் மேர்வின் சில்வா பல ஊடகவியலாளர்களை இம்சித்து சில ஊடக அலுவலகங்களைத் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆவார். ஆயினும் பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ஜனாதிபதியாக இருக்கும் போது மேர்வின் சில்வா ஊடகத்துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய அரசாங்கத்தின் கடந்த கால நடவடிக்கைகள் விடயத்தில் பொதுஜன முன்னணியின் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டம் பெற்றவர்களும் நடந்து கொண்ட முறையைப் பார்க்கும் போது அவர்களுக்கும் ரோஹித்த அபேகுணவர்தனவுக்கும் இடையே என்ன வேறுபாடு இருக்கிறது என்றே கேட்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, பேராசிரியர் ரஞ்சித் பண்டார மற்றும் பேராசிரியர் சரித்த ஹேரத் ஆகிய இதற்கு முன்னர் கோப் குழுவின் தலைவர்களாக இருந்தவர்களும் ரோஹித்தவும் அரசாங்கத்தின் எந்தவொரு தவறான நடவடிக்கையையும் எதிர்க்கவில்லை. அவர்களும் அவற்றை ஆதரித்தனர்.

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் நான்கு பிரதான நடவடிக்கைகள் காரணமாகியதாகவே பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். 2019 ஆம் ஆண்டு வர்த்தகர்களுக்கு பாரியளவில் வரிச் சலுகை வழங்கியமை, 2021 ஆம் ஆண்டு இரசாயன உர இறக்குமதியைத் தடைசெய்தமை, 2021 ஆம் ,ஆண்டு டொலரின் பெறுமதி வேகமாக உயரும் போது அதனைச் செயற்கையாக 203 ரூபாவாக வைத்திருக்க கையிருப்பில் இருந்த வெளிநாட்டுச் செலாவணியை வெளியேற்றியமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற வேண்டும் என்று 2020 ஆம் ஆண்டிலிருந்தே நிபுணர்கள் வழங்கிய ஆலோசனையைப் புறக்கணித்தமை அந்த நான்கு தவறுகளாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட சில அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என்று அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலும் இந்த நான்கு காரணங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு வர்த்தகர்களுக்கு வரிச் சலுகை வழங்கியதால் திறைசேரி 65,000 கோடி ரூபாவை வருடாந்தம் இழக்கும் என்று அப்போதே சில நிபுணர்கள் சுட்டிக் காட்டியனர். ஆனால் பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களான பொருளாதார நிபுணர்கள் அதனை வரவேற்றனர். அதன் மூலம் உற்பத்தி பெருகும் என்று பொருளியல் நிபுணராகக் கருதப்படும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கூறினார்.

திடீரென இரசாயன உரப் பாவனையைத் தடைசெய்வதால் பாரிய பின்விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என விவசாயத்துறை நிபுணர்கள் கூறிய போதும் அத்தடைக்கு எதிரான விவசாயிகளின் ஆர்ப்பாட்டங்கள் எதிர்க்கட்சிகளின் சதி என்றே பொதுஜன முன்னணியின் படித்தவர்களும் கூறினர். எனவே, நாட்டின் நலம் தொடர்பிலான கண்ணோட்டத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கும் ரோஹித்தவுக்கும் இடையே வேறுபாடு இல்லை. கற்றவர்கள் தாம் பெற்ற கல்விக்கு ஏற்ப நடந்துகொள்ளாத வரை ரோஹித்தவின் நியமனம் போன்ற நியமனங்களால் புதிதாக எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.



## வாழ்வியல் தரிசனம்

நல்ல நோக்கங்கள் உங்களது அந்தரங்க ஆன்மாவைச் சுத்தப்படுத்தும். எமக்கே தெரியாமல் எமது ஆன்மா எமது செயல்களைப் பதிவு செய்கின்றது. எனவே, செய் கருமங்களைத் தூய்மையுடன் வைத்திருக்கவும்.

நல்ல எண்ணங்கள் இல்லாதவர்கள் மக்கள் முன் தங்களை முன்னிறுத்த முனையலாகாது. மனிதனுக்கு மனசாட்சி முக்கியமானது. எதனையும் செய்யும் முன் நெஞ்சத்தோடு உரையாடுக.

வாழ்க்கை விளையாட்டு இடமல்ல. ஆனால், விளையாட்டிலும் நேர்மை அவசியமாகும். இதிலும் கூட, கபட நாடகங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளில் சூது, பேரம், பேசுதல், அதிகார பலம் எனப்பல விடயங்கள் உள்ளே நடக்கின்றன.

மனசாட்சியை இயக்குவது கூட தேகத்தில் உள்ள உயிராகும் என்பதை உணர வேண்டும். வாழ்க்கையில் பேசுவது ஒன்றாகவும், செயல் வேறாகவும் இருக்கலாகாது.

யாரோ ஒருவர் தவறு செய்து, அதன்மூலம் ஏதாவது வரவு கிட்டினால் அதுவே அதிர்ஷ்டம் என்றால், அதுவே தொடருமாயின், பாவம் செய்வது பெருவினைகளை வலிந்து ஏற்றுக்கொள்ளும் நிலையாகவே அது அமையும். நேர்மை வழியை விடச் சந்தோஷம் வேறு ஏது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வந்து வழங்குங்கள்

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கான கொடுப்பனவுகளைக் கிராமத்திற்கு வருகை தந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலிருந்து சுதந்திரபுரம் கிராமம் நீண்ட தூரத்தில் உள்ளது. தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எட்டு கிலோ மீற்றர் தூரம் முதியவர்கள் நடந்து சென்றே ஏ-35 சாலையில் புதுக்குடியிருப்பு செல்ல வேண்டும்.

முன்பு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் சுதந்திரபுரம் கிராம அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. தற்போது அவ்வாறு வழங்கப்படுவதில்லை.

1,000 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் போக்குவரத்து நெருக்கடி பெரும் பிரச்சனையாக உள்ள நிலையில் பிரதேச செயலகம் தமது கொடுப்பனவுகளை முதியவர்களுக்கு சுதந்திரபுரம் கிராமத்தில் வைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதியவர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# நீரை பாதுகாப்போம்

## 2024 மார்ச் 22 சர்வதேச நீர் நாள்







பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் தூதுவர்

“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு” என்கின்றது திருக்குறள். உலக நாடுகளின் நாகரிகங்கள் யாவும் நதிக்கரையினை அண்டியே உருவாகின. யூப்பிரத்தீஸ் - தைக்கிரீஸ் நதிக்கரை நாகரிகம், நைல் நதிக்கரை நாகரிகம், சிந்துவெளி நாகரிகம், ஹூவாங்கோ நதிக் கரையோர நாகரிகம், மொசப்பத்தேனியா நாகரிகம், அமேசன் நதி நாகரிகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சுத்தமான குடிநீர் என்பது மனித வர்க்கத்துக்கு அடிப்படையான ஒன்று! சுகாதாரமான, ஆரோக்கியமான வாழ்விற்குத் தண்ணீர் அத்தியாவசியம்.

சுமார் 783 மில்லியன் மக்கள் சுத்தமான குடிநீரின்றி இந்த உலகில் வாழ்கின்றனர் என்கின்றது புள்ளி விபரம் கிட்டத்தட்ட 2.5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் போதுமான சுகாதார வசதிகளின்றி தமது ஜீவியத்தைக் கொண்டு செல்கின்றனர்.

பாதுகாப்பற்ற நீரைப் பருகுவதாலும், மோசமான சுகாதார வசதிகளாலும், உலகில் சுமார் 700க்கும் மேற்பட்ட, ஏழு வயதிற்கும் குறைவான வயதுடைய பிள்ளைகள், அனுதினமும் நோயினால் மரணிப்பது வேதனைக்குரியது.

ஏறத்தாழ 2.1 பில்லியின் மக்கள் தங்களுடைய வீடுகளில் பாதுகாப்பற்ற நீரைப் பருகுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் கிராமப்புறங்களில் வாழ்பவர்களும், நிலையாக ஓரிடத்தில் வாழாது இடம் பெயர்ந்து வாழ்க்கையைக் கொண்டு செல்பவர்களுமாக உள்ளவர்கள் ஆவர்.

உலக சனத்தொகையில் 36 சதவீதமானோர் அதாவது 2.8 பில்லியின் மக்கள் மிகக் கூடுதலான தண்ணீர் பற்றாக்குறை உள்ள நாடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்த தொகையானது , 2050இல் சுமார் 50 சதவீதத்தால் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

தண்ணீரின் தேவைப்பாடு தொடர்பாகவும், அத்தனது அத்தியாவசியம் பற்றியும் பலராலும் இன்று உணரப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 22ஆம் திகதி மார்ச் மாதம் 1992இல் பிரேசிலிலுள்ள ரியோ டி ஜெனீரோ என்னுமிடத்தில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் வைக்கப்பட்ட 21ஆம் நூற்றாண்டின் செயற்றிட்டத்தின்படி, 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற 47ஆவது ஐ.நா சபையின் கூட்டத்தில் 193ஆவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் படி 1993ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 22 ஆம் திகதியை உலக நீர்வள தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பிரகடனம் செய்தது.

இந்த ஆண்டுக்கான உலக நீர் தினத்தின் தொனிப் பொருளாக அமைவது, ‘அமைதிக்காக நீரை மேம்படுத்துதல்’, என்பதாகும்.

நீர் மாநாட்டின் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் இந்த ஆண்டின் கருப்பொருள் அமைதி மற்றும் நிலையான வளர்ச்சியை வளர்ப்பதில் எல்லை கடந்த நீர் ஒத்துழைப்பின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

சர்வதேச நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு மையத்தால் முன் மொழியப்பட்ட 2024ஆம் ஆண்டிற்கான இந்த கருப்பொருளை நோக்கும் பொழுது, எதிர்காலத்தில் மிகவும் அரிதாகக் கிடைக்கக்கூடிய பொருளாகத் தண்ணீர் மாறப் போகின்றது என்பதனையும், அதனால் உலக நாடுகளிடையே அமைதி மற்றும் ஒற்றுமையினை வளர்க்கவும் , எல்லை கடந்த நீர் வளங்களைத் தண்ணீர் தேவைப்படும் நாடுகளிடையே பங்கீடு செய்து வழங்க வேண்டியதன் அவசியத்தினையும் உணர்த்துவதாக இக்கருப்பொருள் அமைகின்றது.

உலக தண்ணீர் தினத்தின் சின்னமானது நீல நிறத்திலுள்ள நீர்த்துளியின் வடிவமாகும்.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளின் படி, 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்கான இலக்கை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

உலகத்திலுள்ள நீரில் 97.5 சதவீதம் சமுத்திர நீராகும். மீதமுள்ள 2.5 சதவீதம் தான் சுத்தமான நீராகும். இதில் 2.24 சதவீதம் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகளாகவும், பனிக்கட்டிகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள 0.26 சதவீத தண்ணீரைத் தான் குடிநீராகவும், விவசாயத்துக்கும் பயன்படுத்தும் நிலையில் இருக்கின்றான் மனிதன்! மிஞ்சுகின்ற சொற்ப அளவு குடிநீரும் கழிவுகளால் மாசடைந்து வருகிறது.

ஆண்டு தோறும் 40 ஆயிரம் தொன் கழிவுகள் நீரை மாசுபடுத்தி வருகின்றன.

நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றது.

நீரானது மிகவும் பெறுமதி மிக்க பொருளாகும். அதனைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும்.

நகரமயமாக்கம், தொடர் மாடிக் கட்டிட நிர்மாணம், வன அழிப்பு, இயற்கை வள அழிப்பு, கைத்தொழில் மயமாக்கம், அதன் மூலம் ஏற்படுகின்ற சூழல் மாறுபாடு/மாசுபாடு, விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற இரசாயனங்களின் மூலமாக நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு, காலநிலை மாற்றம், ஆற்று மண் அகழ்வு, போன்ற இன்னோரன்ன காரணிகளால் நீர்ப் பற்றாக்குறை, நீர் மாசடைவு ஏற்படுகின்றது.

இன்று உலகில் கோடிக்கணக்கான மக்கள் குடிப்பதற்குச் சுத்தமான நீர் இல்லாமல் குடிநீரைத் தேடிப் பல மைல்களுக்கு அப்பால் நடந்து சென்று எடுத்து வருவதுவும், நோயினால் பாதிக்கப்படுவதுவும் , அதன் மூலம் இறப்பு ஏற்படுவதுவும் கவலைக்குரிய விடயமாகும்.

உலகின் பல பகுதிகளில் காணப்படுகின்ற தண்ணீர் பற்றாக்குறையானது பெண்களது வாழ்வாதார நிலைமைகளுடன் தொடர்பு கொண்டது என்று கூறினால் மிகையாகாது. பாடசாலை செல்லும் சிறுமிகளதும், அவர்களது கல்வி நடவடிக்கைகளிலும் கூட இது பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. தண்ணீர் சேகரிக்கும் குழாய்களில் ஏற்படுகின்ற “குழாயடி சண்டைகள்” பெண்களது சமூக உறவுகளில் பாதிப்பினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, உளவியல் ரீதியாகவும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

மிக அதிகமான தண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்கி உள்ள நாடுகளாக பதினேழு நாடுகள் காணப்படுகின்றன எனவும் இதன் காரணமாக மக்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏற்பட்டு அவை அமைதிக்கான நடவடிக்கைகளில் குந்தகத்தினை ஏற்படுத்தும் என “உலக வள நிறுவனம்” அறிவிக்கின்றது.

மனிதனது குடிநீருக்கும் மற்றும் பிற தேவைகளுக்கும் தேவைப்படுகின்ற தண்ணீர் தட்டுப்பாடானது இன்று விரிவடைந்து கொண்டே செல்கின்றது.

தண்ணீர் பங்கீடு தொடர்பாக நாடுகளுக்கு இடையில் நிலவுகின்ற முரண்பாடுகள் கூட அந்தந்த நாடுகளின் இராஜதந்திர உறவுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாக மாறி விடுவதுவும் கூட தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

அந்த வகையில், எகிப்துக்கும், எத்தியோப்பியாவிற்கும் இடையிலான நைல் நதிப் பிரச்சினை, துருக்கி, சிரியா, ஈராக் ஆகிய நாடுகளுக்கு இடையில் காணப்படுகின்ற யூப்பிரத்திஸ் - தைக்கிரிஸ் நதிப் பிரச்சினை, ஆப்கானிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையில் நிலவுகின்ற நீர்ப் பிரச்சினை, இந்தியா பாகிஸ்தானுக்கு இடையில் நிலவுகின்ற சிந்து நதி நீர்ப் பிரச்சினை, இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையில் காணப்படுகின்ற பிரமபுத்திரா நதி பிரச்சினை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எமது நாட்டிலும் கூட பல பிரதேசங்களில் குடிநீர் பற்றாக்குறை, சுத்தமான தண்ணீர் பற்றாக்குறை போன்றவற்றால் அவதிப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், எமக்குத் தேவையான சுத்தமான/சுத்திகரிக்கப்பட்ட நீர் தாராளமாகக் கிடைக்குமானால் நாம் பெரும் பாக்கியசாலிகளே!

கிடைக்கின்ற நீரை அரிதாகப் பயன்படுத்தி அதனை நாம் சேமித்து வைப்பது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும்.

இலவசமாகக் கிடைப்பதனால் எம்மில் அனைவருக்குத் தண்ணீரின் முக்கியத்துவம் தெரிவதில்லை . ஆனால் , அதுவே அரிதாகக் கிடைக்கும் பொழுது தான் அதனுடைய தாற்பரியம்நமக்கு விளங்கும்.

மழைக் காலங்களில் எமக்குத் தேவையான நீரைச் சேமித்து, அதனை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் அல்லவா!

“வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணாகக் கடலைச் சென்றடைய விடமாட்டேன்” என்றார் பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டுவித்த முதலாம் பராக்கிரமபாகு நீரின் முக்கியத்துவத்தினை உணர்ந்த, உணர்த்துவித்த பண்டைக்கால மன்னனின் புகழ் பெற்ற கூற்று அது!

நீரின் பயன்பாடு தொடர்பாகவும், அதனது சிக்கனத்தன்மை சம்பந்தமாகவும், எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துரைப்பது இன்றைய கால கட்டத்தில் அவசியமாகும்.

நீரின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது எம்மவர்களின் கடமையாகும். தண்ணீர் சம்பந்தமாக வெளிவந்த ஆவணப் படங்களை (Documentary Films) பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் வெளியிடுவதும் கூட விழிப்புணர்வை ஏற்படுத்தும்.



# சிட்டுக் குருவிகளை காப்போம்



**பறவைக் கூடுகளை உருவாக்குபவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய ஒரு இலட்ச ரூபாய் செலவாகிறது என்கிறார் தலிநாயுடு**

வேகமாக அழிந்து வரும் சிட்டுக்குருவிகளைக் காப்பாற்றப் போராடி வருகிறார் ஆந்திராவின் காக்கிநாடாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் பொலுவர்த்தி தலிநாயுடு. தனது ஓய்வூதியப் பணத்தைக் கொண்டு, சிட்டுக்குருவிகளைக் காப்பாற்றுவதற்காக உணவுக் கூடுகளை உருவாக்கி வருகிறார் இவர். மேலும் சிட்டுக்குருவிகள் பாதுகாப்பிற்காக ஹரிதா விகாஸ் என்ற அறக்கட்டளையை தொடங்கியுள்ளார்.

வரி குச்சுலு எனும் உணவுக் கூடுகளைத் தயாரிப்பதும் அதைச் செய்வது எப்படி என மக்களுக்குக் கற்றுக்கொடுப்பதும் இந்த அறக்கட்டளையின் முக்கியப் பணி. சமீபத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் கதிர்களைக் கொண்டு பறவைகளுக்காக இந்த உணவுக்கூடுகள் உருவாக்கப்படுகின்றன.

இது குறித்துப் பேசிய அவர், “எங்கள் முக்கிய நோக்கம் பறவை உணவுக்கூடுகளைத் தயாரிப்பது. அதைச் செய்வது எப்படி என்பதைக் கிராமத்தில் பலரும் மறந்துவிட்டனர். நான் ஆசிரியராக வேலை செய்த போது, சுப்பா ராவ் என்பவர் கோவில்களில் நெல் உணவுக்கூடுகளை தொங்கவிடுவார்.

அதைப் பார்த்தாலே சந்தோஷமாக இருக்கும். அவரிடமிருந்து தான் இதை எப்படிச் செய்வது என் கற்றுக்கொண்டேன். இதை விதவிதமாக செய்து, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க எண்ணினேன். பலரும் தீவனக்கூடுகளை செய்து, வீட்டில் வைத்தால் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை கூடும்.

அவற்றின் எண்ணிக்கை அதிகரித்தால், மைனாக்கள், கிளிகள், போன்ற பல பறவைகள் மற்றும் அணில்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். இந்த உயிர்கள் நமது வாழ்வாதாரங்களை உயர்த்தும். இதுவே எனது நோக்கம்” என்கிறார்.

பணி ஓய்வுக்குப் பிறகுக் கிராமங்களுக்குச் சென்று, சிட்டுக்குருவிகளுக்கான உணவுக் கூடுகளை வீடுகளில் தொங்க விடுவது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி வருகிறார். இவரது முயற்சியால், பல கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தங்கள் வீடுகளில், ஊர் கோவில்களில், சுற்றுப்புறங்களில் தீவனக் கூடுகளை வைக்கத் தொடங்கியுள்ளனர்.

தனது ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்து வருகிறார் தலிநாயுடு. இதிலிருந்து கிடைக்கும் நெல்லை தீவனக் கூடுகளைத் தயாரிக்க மட்டுமே பயன்படுத்துவதாகக் கூறுகிறார்.

பறவைக் கூடுகளை உருவாக்குபவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய ஒரு இலட்ச ரூபாய் செலவாகிறது என்கிறார் தலிநாயுடு. சிட்டுக்குருவிகளைக் காப்பாற்ற இவர் எடுத்துள்ள முயற்சிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

2012 முதல், பறவைகள் குறிப்பாகச் சிட்டுக்குருவிகளைப் பாதுகாப்பதற்கான இவரது முயற்சிகளைப் பாராட்டிப் பல விருதுகளை அளித்துள்ளது அரசு. 2019 முதல் ஹரிதா விகாஸ் அறக்கட்டளை மூலமாகச் சிட்டுக்குருவிகளைப் பாதுகாக்கவும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார் தலிநாயுடு.

இங்கிலாந்து

முடியாட்சி பற்றிய

# தீர்க்கதரிசியின் கணிப்பு?

15ஆம் நூற்றாண்டில் பிரான்ஸில் வாழ்ந்த தீர்க்கதரிசி நாஸ்ட்ராடாமஸ் எதிர்காலத்தில் நடக்கவிருப்பவை பற்றிப் பல துல்லியமான கணிப்புகளைச் செய்துள்ளார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணம், ஹிரோஷிமா குண்டுவெடிப்பு மற்றும் நெப்போலியனின் எழுச்சி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. 2024ஆம் ஆண்டு முடியாட்சிக்குக் கடினமான காலகட்டமாக இருக்கும் என்றும் கணித்து இருந்தாராம்.

அந்தவகையில், இங்கிலாந்து மன்னர் சார்லஸ் மற்றும் அவரது மருமகள் இளவரசி கேட் மிடில்டன் ஆகியோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தீவுகளின் மன்னர், மன்னருக்கான அடையாளமே இல்லாத ஒருவரால் பதவியிலிருந்து அனுப்பப்படுவார் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.





இதில் தீவுகளின் மன்னர் என்பது சார்லஸைக் குறிப்பதாகவும், மன்னருக்கான அடையாளமே இல்லாத ஒருவர் என்பது ஹரியைக் குறிப்பிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கூறியது போல, மன்னர் சார்லஸ் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு ள்ளதால் பதவி விலகக் கூடும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

அதேசமயம் ஹரி, மன்னர் குடும்பத்திலிருந்து விலகி இருக்கிறார்.

இதன் காரணமாகவே நாஸ்ட்ராடாமஸ் சொல்லும் எதிர்பாராத வாரிசு ஹரிதான் என்கிறார்கள்.



ஐ.பி.எல்:

# பஞ்சாப்பை வென்ற பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பெங்களூருவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் உடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூருவின் அணித்தலைவர் பப் டுபிளெஸி தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், அணித்தலைவர் ஷீகர் தவானின் 45 (37), ஜிதேஷ் ஷர்மாவின் 27 (20), பிரபஹ்சிம்ரன் சிங்கின் 25 (17), சாம் கர்ரனின் 23 (17), ஷஷாங் சிங்கின் ஆட்டமிழக்காத 21 (08), லியம் லிவிங்ஸ்டோனின் 17 (13) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மொஹமட் சிராஜ் 4-0-26-2, யஷ் தயால் 4-0-23-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூரு, விராட் கோலியின் 77 (49), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 28 (10), தாக்கம் செலுத்தும் மாற்று வீரராக தயாலுக்குப் பதிலாகக் களமிறங்கிய மஹிபால் லொம்ரோரின் ஆட்டமிழக்காத 17 (08) ஓட்டங்களோடு 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஹர்பிறீட் பிறார் 4-0-13-2, ககிஸோ றபாடா 4-0-23-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக விராட் கோலி தெரிவானார்.

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்கிறது.




# சென்னையில் ஐ.பி.எல் இறுதி

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) இறுதிப் போட்டியானது 12 ஆண்டுகளின் பின்னர் இம்முறை மே மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முன்னதஅக 2011, 2012 ஐ.பி.எல் இறுதிப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றிருந்தன.

இதேவேளை, மே மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிப் போட்டியும் சென்னையில் நடைபெறவுள்ளதோடு, அஹமதாபாத்தில் மே 21, 22ஆம் திகதிகளில் முதலாவது தகுதிப் போட்டியும், வெளியேற்றப் போட்டியும் நடைபெறவுள்ளது.



காசா

ரமழான் மாதத்தில்

## போரை நிறுத்த ஏற்பாடு

இஸ்லாமிய மக்களின் புனித மாதமான ரமழானின்போது காசாவில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்தவேண்டுமென வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேல் தாக்குதலால் குழந்தைகள் உட்பட 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீன் மக்கள் காசாவில் கொல்லப்பட்டதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில். அங்கு போர்நிறுத்தத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கொண்டுவரப்பட்டு பலமுறை அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் வீட்டோ மூலம் தோற்கடிக்கப்பட்டன.

எனவே, ரமழான் மாதத்தின்போது போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் தீர்மானம், கொண்டு வரப்பட்டுள்ளது.


அமெரிக்கா

கப்பல் மோதி

## மேரிலண்ட் பாலம் உடைவு

அமெரிக்காவின் பால்டிமோர் பகுதியில் சரக்கு கப்பல் மோதி மேரிலண்ட் பாலம் உடைந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பால்டிமோரின் மேரிலாந்தில் உள்ள ஒரு பெரிய பாலமே மேரிலண்ட். நேற்று செவ்வாய் பால்டிமோர் துறைமுகத்தை கடக்கும் இந்தப் பாலத்தில் சரக்கு கப்பல் மோதியதில் பாலம் இடிந்து விழுந்ததாக கூறப்படுகின்றது.





# சியெஸ்காவுக்காக மோதும் லிவர்பூல், யுனைட்டெட்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் மத்தியகளவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழங்களான மன்செஸ்டர் யுனைட்டெட்டும், லிவர்பூலும் போட்டியிடுகின்றன.

அடுத்தாண்டு வரையில் ஜுவென்டஸுடன் 26 வயதான சியெஸ்கா ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

திருவள்ளூர்

# சிசுவை கிணற்றில் வீசி கொலை செய்த தாய்

பச்சிளம் சிசுவை கிணற்றில் வீசி கொலை செய்துவிட்டு குழந்தையைக் காணவில்லை என்று நாடகமாடிய தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தை அடுத்த விஜயநல்லூர் விஜயா கார்டன் பகுதியில் வசித்து வருபவர் ரமேஷ்(25). இவர் சத்யா(22) என்பவரைக் காதலித்து திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு அண்மையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. 8 மாதத்திலேயே குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தை, மருத்துவமனையிலிருந்து சில நாட்களுக்கு முன்பு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நேற்று முன்தினம் பாடியநல்லூர் அங்காள ஈஸ்வரி கோயில் தீமிதி திருவிழாவுக்குத் தீச்சட்டி எடுக்கச் சென்றுள்ளார் ரமேஷ். அப்போது, குழந்தையை உறவினர்களிடம் கொடுத்துவிட்டு சத்யாவும் கோயிலுக்குச் சென்று திரும்பி வந்துள்ளார்.

வீட்டிலிருந்தபோது, கழிவறைக்குச் சென்று திரும்பி வந்து குழந்தையைக் காணவில்லை என்று அலறித் துடித்துள்ளார். தொடர்ந்து, உறவினர்கள் மற்றும் பொலிஸார் தேடியபோது, அருகில் உள்ள கிணற்றில் குழந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சோழவரம் பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக



அனுப்பிவிட்டு விசாரணை நடத்தியபோது, அருகிலிருந்த கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்துள்ளனர். அப்போது, தாய் சத்யாவே குழந்தையை மறைத்து எடுத்துச்சென்று கிணற்றில் வீசியது தெரியவந்தது. இதனையடுத்து, குழந்தையைக் கொலை செய்து நாடகமாடிய தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.




# அம்ரபட்டைக்கு ‘வட்டம்’

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான பியொரென்டாவின் மத்தியகளவீரரான சோஃபயான் அம்ரபட்டைக் கடனடிப்படையில் கைச்சாத்திட்ட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட், அவரது கடன் ஒப்பந்தத்தை நிரந்தரமாக்காது எனத் தெரிகிறது.

அந்தவகையில் 27 வயதான அம்ரபட்டைக் கைச்சாத்திட சீரி ஏ கழகங்களான ஏ.சி மிலன், ஜுவென்டஸ் முயல்வதாகக் கூறப்படுகிறது.

தூத்துக்குடி

கனிமொழிக்கு

## ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு

மக்களவைத் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ள நிலையில், தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி பாராளுமன்றத் தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதியை ஆதரித்து தூத்துக்குடி காமராஜர் மார்கெட் பகுதிகளில் வியாபாரிகளிடமும் பொதுமக்களிடமும் வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது, அரசியல் பிரமுகர்கள் பலர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 27, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.